அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP: 14/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 22-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.சா.1 | 22.06.2026 |
| பெயர் ரேவதி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. இந்த வழக்கின் அனைத்து விவரங்கள் எனக்கு தெரியும். எனது தந்தைக்கும் மனுதாரரின் கணவரான ஜெகதீசன் என்பவருக்கும் இடையேயான பணபரிவர்த்தனை பற்றி தெரியுமா என்றால் நோட்டீஸ் வந்தபிறகு தெரியும். எனது அம்மா மனுதாரரின் கணவருக்கு மனுசொத்து பொருத்து பவர் எழுதிகொடுத்து பணம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மனுசொத்தில் நான் வாடகைதாரராக இருக்கிறேனா என்றால்இல்லை எனது சொந்தவீடு ஆகும். எனது அம்மாவிற்கு மாதமாதம் நான் வாடகைபணம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல.

2. மனுதாரர் மற்றும் அவரது கணவர் மனுசொத்தை கிரையம் பெற்றுவிட்டதால் மனுசொத்தை நான் காலிசெய்யவேண்டும் என்றும்

சொன்னார்களா என்றால் மனுதாரர் கணவர் ஜெகதீசன் சொன்னார். நான் மனுதாரர் லட்சுமியை இதுவரை பார்த்தது இல்லை. என் அம்மா ஜெகதீசன் என்பவருக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்என்றால் சரிதான். எனது அம்மா ஜெகதீசன் என்பவருக்கு எழுதிகொடுத்த பொதுஅதிகாரபத்திரத்தை ஜெகதீசன் என்பவர் தவறாக பயன்படுத்திவிட்டார் என்று தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எனது அம்மா சேர்ந்து மனுதாரர் மற்றும் அவரது கணவரிடம் 2 மாதத்தில் வீட்டை காலிசெய்து கொடுப்பதாக வாய்மொழியாக உறுதிகூறினோம் என்றால் சரியல்ல.

3. தற்போது எந்த உறுதிமொழியும் கொடுக்கவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா பவர் கொடுத்ததன் அடிப்படையில் ஜெகதீசன் என்பவர் மனுதாரருக்கு மனுசொத்தை கிரையம் செய்த விவரம் 21.02.2020 அன்றே அம்மாவிற்கு தெரியும் என்றால் நோட்டீஸ் கிடைத்தபிறகு தான் கிரையம் பற்றியவிவரம் தெரியும். அவ்வாறு நோட்டீஸ் கிடைத்த 04.01.2022 அன்று தான் எனது அம்மாவிற்கு கிரையம் பற்றிய விவரம் தெரியும் என்பது பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல. கிரையபத்திரத்தில் உள்ள லைப் சான்றிதழில் எனது அம்மா கைஎழுத்து உள்ளது என்றால் சரிதான். 21.02.2020 அன்றே எனது அம்மாவிற்கு மனுசொத்து கிரையம் செய்த விவரம் தெரியும் என்றால் சரியல்ல.

4. 04.01.2022 அன்று தான் எனக்கும் எனது அம்மாவிற்கு கிரையம் பற்றிய விவரம் தெரியும் என்பது பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல. எனது அம்மா சொத்தைவிட்டு வெளியேறிவிடகூடாது என்பதற்காகவும் மனுதாரர் மற்றும் அவரது கணவரை ஏமாற்றும் எண்ணத்திலும் என்னை மனுசொத்தில் அமர்த்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு

புறம்பாக மனுசொத்தில்  குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாடகை அளித்துவருகிறேனா என்றால் இல்லை. மனுசொத்து கிரையம் செய்ததில் இருந்து 6 வருடங்களுக்கு பிறகு தான் எனது அம்மா சொத்துகுறித்து  பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5.  மனுதாரர் மற்றும் அவரது கணவர் என்னை பலமுறை சந்தித்து வாடகை ஒப்பந்தம் போடுமாறும், வாடகை பணம் செலுத்தவேண்டும் என்று வலியுருத்தியும் நான் மனுசொத்தில் வாடகை தராமல்இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.